## அனர்த்த முகாமைத்துவ நிலையம் - 2015

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) இணக்கம்**

**எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்:** முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 278 மில்லியன் கிரயத்தில் நிலையத்தால் கொள்வனவு செய்யப்பட்ட முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள் அவற்றின் பாவனைக் காலத்தை மீளாய்வு செய்யாமல் நிலையத்தால் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்ததுடன் நியமத்தின் 65 ஆம் பிரிவின் பிரகாரம் மாற்றங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 மற்றும் 2014 இல் ரூபா 5.28 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் பராமரிப்புக் கிரயமாக தவறுதலாக பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் இந்த தவறு திருத்தப்பட்டிருந்த போதிலும் அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களை மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அனர்த்த முகாமைத்துவம் மற்றும் ஆபத்துக்களை குறைத்தல் தொடர்பான நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு 18 மாவட்டச் செயலகங்களிற்கு அனுப்பப்பட்டிருந்த ரூபா 18.21 மில்லியன் தொகை 2015 திசெம்பர் 31 வரையிலும் அத்தகைய நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிராத போதிலும் பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளாக கருதப்பட்டு அதற்கிணங்க கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) நிலையத்தின் தலைமை அலுவலகக் கட்டிடமானது நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்றிட்டத்தினால் ஒதுக்கப்பட்ட நிதிகளை பயன்படுத்துவதன் மூலம் 2010 இல் ரூபா 1,034.39 மில்லியன் கிரயத்தில் வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு சொந்தமான காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய காணியின் உரிமைத்துவமானது உரிய நிலையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டிருக்காததால் நிதிக்கூற்றுக்களிற்கு கட்டிடத்தின் நிர்மாணக் கிரயம் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது நன்கொடைகளாக நிலையத்தினால் பெறப்பட்ட இயந்திரத்துடனான 15 காப்பாற்றும் படகுகள், 05 மடிக் கணனிகள், 05 புகைப்படமெடுக்கும் கருவிகள், அச்சிடல் இயந்திரம் மற்றும் ஏனைய சொத்துக்கள் போன்ற சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களிற்கு பெறுமதியிடப்பட்டுக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) 2016 சனவரியில் நிலையத்தால் பெறப்பட்ட ரூபா 20.36 மில்லியன் பெறுமதியான 300 கம்பூட்ஸ் (Gumboots), 241 தனியான அபாய ஒலி எழுப்பும் கருவிகள் மற்றும் 100

பிளாஸ்ரிக் தண்ணீர் தாங்கிகள் என்பவற்றின் இருப்பு 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையிலுள்ள இருப்புக்களாக மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் தவறுதலாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா 1,244 மில்லியன் தொகையான அவசர நுட்ப செயற்திட்டத்திற்கான சர்வதேச நிலையத்திலிருந்து பெறப்பட்ட மானியம் பதிவுசெய்தல் தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 2.85 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 628,008 தொகையான கொடுக்கவேண்டிய கணக்குகள் நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டிற்கான தொலைத்தொடர்பாடல் உபகரணம் மீதான பெறுமானத்தேய்வு மற்றும் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் கணிப்பீட்டுத் தவறுகள் காரணமாக முறையே ரூபா 214,080 மற்றும் ரூபா 91,097 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 04 முற்பண மீதிகள் மற்றும் தொடர்புடைய பதிவேடுகளில் காட்டப்பட்ட மீதிகள் என்பவற்றிற்கிடையே ரூபா 371,066 கூட்டுத்தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களிலுள்ள பின்வரும் விடயங்கள் தேவையான தகவல் மற்றும் ஆவணச் சான்று கிடைக்கப்பெறாமை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக ஊறுதிப்படுத்தவோ அல்லது சரிபார்க்கவோ முடியாதிருந்தது.

(அ) ரூபா 334,588 கிரயமான அனர்த்த முகாமைத்துவச் சபைக்குச் சொந்தமான நடைமுறையல்லாச் சொத்துக்கள் பௌதீக பரீட்சிப்பிற்காக வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நுகர்வுப்பொருள் மற்றும் ஏனைய இருப்புக்களின் விபரங்களானது நிலையம் பல்வேறு இடங்களில் பல்வேறு பதிவேடுகளை பராமரிப்பதனால் கணக்காய்விற்காக உடனடியாக வழங்கமுடியாதிருந்தது.

(இ) 06 மாவட்டங்களில் நடாத்தப்பட்ட கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புடைய 2015 சனவரியிலிருந்து யூன் வரையான காலப்பகுதியின் போது நடாத்தப்பட்ட செயன்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின் போது பின்வரும் இணங்காமை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம், வழங்கப்பட்ட அனைத்து முற்பணங்களும் ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலுள்ளவாறு தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 2.58 மில்லியன் கூட்டுத்தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 14 சந்தர்ப்பங்களில் நிலையத்திற்கு சொந்தமான 09 மோட்டார் வாகனங்கள் விபத்துக்குள்ளாகியிருந்த போதிலும் ஆரம்ப புலனாய்வு மீதான அறிக்கைகள் நிதிப்பிரமாணம் 104 இன் மூலம் வேண்டப்பட்டவாறு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அத்தகைய

விபத்துக்களின் விபரங்கள் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிலையத்தின் செயற்பாட்டு விளைவுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 2.62 மில்லியன் தொகையான மிகைக்கெதிராக ரூபா 15.76 மில்லியன் தொகையான பற்றாக்குறையொன்றானதால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 18.38 மில்லியன் வீழ்ச்சியொன்றை இது சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏனைய வருமானம் ரூபா 51.04 மில்லியன் தொகையால் குறைவடைந்தமை மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான மேற்படி பற்றாக்குறை கீழே காட்டப்பட்டவாறு பின்வரும் சீராக்கங்களை மேற்கொண்ட பின்னர் ரூபா 49.04 மில்லியன் மிகையொன்றாகவிருந்தது.

| **விபரம்** | **தொகை** |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| ஆண்டிற்கான பற்றாக்குறை | (15.76) |
| கூட்டு :- | |
| சம்பளங்கள் | 59.28 |
| மூலதன மானியங்கள் மீதான பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு | 5.52 |
| மிகை / ஆண்டிற்கான பங்களிப்பு | **49.04** |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 83 சிறியளவிலான அனர்த்த இடர் குறைப்பு செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நிலையம் திட்டமிட்டிருந்ததுடன் இந்த நோக்கத்திற்காக வரிசை அமைச்சினூடாக பொதுத் திறைசேரியிடமிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 505.39 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்த போதிலும் அமுல்படுத்தல் மீதான கட்டுப்பாடுகள், மேற்பார்வைகள் மற்றும் அவற்றின் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் என்பன திருப்திகரமான நிலையில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

(i) நிலையத்தால் வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம், 42 சிறியளவிலான அனர்த்த இடர் குறைப்பு செயற்திட்டங்களுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் பிற்பகுதியில் நடவடிக்கைகளை ஆரம்பித்தமை, ஒப்பந்தங்களை வழங்குவதிலுள்ள தாமதம், பிரதேசங்களிலுள்ள சமூக அமைதியின்மை, காலநிலை சீரற்றிருத்தல் போன்ற பல காரணங்களினால் அத்தகைய இடர் குறைப்பு

செயற்திட்டங்களை பட்டியலிடப்பட்ட காலப்பகுதியில் பூர்த்திசெய்ய முடியாதிருந்தது என நிலையப் பணிப்பாளர் நாயகம் எனக்கு அறிவித்திருந்தார்.

(ii) அத்தகைய செயற்திட்டங்களின் அமுல்ப்படுத்தல் தொடர்பான பொறுப்பு மற்றும் அவற்றின் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் மாவட்டச் செயலகங்களிடமிருக்கின்ற போதிலும் குறிப்பிட்ட நோக்கங்களிற்காக ஒதுக்கப்பட்ட நிதிகளின் பயன்பாடு மீதான மேற்பார்வைக் கட்டுப்பாடுகள் நிலையத்தால் போதுமானளவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- மாவட்ட மட்டத்தில் அத்தகைய செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு ரூபா 176.49 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் 38 அனர்த்த முகாமைத்துவம் மற்றும் குறைப்பு செயற்திட்டங்கள் மீதான வேலை பூர்த்தியாக்கல் அறிக்கைகள் மாவட்டச் செயலகத்தால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- ரூபா 191.43 மில்லியன் பெறுமதியான 34 அனர்த்த குறைப்பு செயற்திட்டங்களிற்கான ஒப்பந்தங்கள் ஒப்பந்ததாரர்களுடன் சாதாரண உடன்படிக்கைகளில் கைச்சாத்திடாமல் வெளிநபர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது.

- 26 அனர்த்த குறைப்புச் செயற்திட்டங்களை ரூபா 77.90 மில்லியன் கிரயத்தில் அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அத்தகைய செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு உரிய மாவட்டச் செயலகங்களிற்கு ரூபா 57.59 மில்லியன் தொகை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விடுவிக்கப்பட்டிருந்தது.

(iii) சிறியளவிலான அனர்த்த குறைப்பு செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் மீளாய்வாண்டின் இறுதியிலேயே நிலையத்தால் விடுவிக்கப்பட்டிருந்ததன் விளைவால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட குறிப்பிட்ட காலப்பகுதிகளினுள் அனர்த்த குறைப்புச் செயற்திட்டங்களை ஆரம்பிக்க முடியாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது ரூபா 52.45 மில்லியன் கிரயத்தில் மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 12 செயற்திட்டங்களில் 2015 திசெம்பரில் மாத்திரம் 11 செயற்திட்டங்களிற்கான ஒப்பந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன என வெளிப்பட்டது. ஏனைய செயற்திட்டத்திற்கான ஒப்பந்த உடன்படிக்கை 2016 சனவரியிலேயே கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(iv) நடைமுறையொன்றாக, அனர்த்த குறைப்பு செயற்திட்டங்கள் மீதான நிதிக்கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்காக உரிய செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றத்தை அடிப்படையாகக்கொண்டு நிதிகளை விடுவிப்பதற்குப் பதிலாக அவற்றை அமுல்ப்படுத்துவதன் ஆரம்பக் கட்டத்தில் மாவட்டச் செயலகங்களிற்கு முழு ஒதுக்கீடுகளையும் நிலையம் விடுவிக்கின்றது. நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தால் மேற்கொள்ளப்பட்ட விளக்கத்தின் பிரகாரம், உரிய மாவட்டச் செயலகங்களால் வேண்டப்பட்டவாறு குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களில் சில செயற்திட்டங்களிற்கான முழு ஒதுக்கீடுகளும் விடுவிக்கப்பட்டிருந்தது.

(v) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் 2015 ஆகஸ்ட் மாதத்தில் மீளாய்வுசெய்யப்பட்டிருந்ததுடன் முன்னைய செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமுல்ப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 33 அனர்த்த குறைப்புச் செயற்திட்டங்கள் திருத்தப்பட்ட திட்டத்தில் நீக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) கணக்காய்விற்காக வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 03 பிரதான வெள்ள குறைப்பு செயற்திட்டங்களை நிலையம் அமுல்ப்படுத்தியிருந்ததுடன் அவற்றில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெள்ள குறைப்பு செயற்திட்டங்களின் கீழான வேலைகள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. தம்புள்ளயில் அமுல்ப்படுத்தப்பட்ட வெள்ள குறைப்பு செயற்திட்ட நோக்கத்திற்காக ரூபா 95 மில்லியன் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக மாத்தளை மாவட்டச் செயலாளரிற்கு 2015 திசெம்பர் 31 வரை ரூபா 114.79 மில்லியன் தொகை அனுப்பப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த செயற்திட்டத்தின் கீழான வேலைகள் 2016 யூன் 30 வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், களுத்துறையில் வெள்ள குறைப்பு செயற்திட்டத்தின் கீழான வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலாளரிற்கு ரூபா 139 மில்லியன் தொகையான முழு ஒதுக்கீடும் அனுப்பப்பட்டிருந்த போதிலும் 2016 யூன் 30 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. அதேநேரம் இந்த செயற்திட்டத்தின் கீழ் கரப்பன் - எல வடிகாலமைப்பு முறைமையின் அபிவிருத்தி வேலைகள் 2014 இல் பூர்த்திசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 16.14 மில்லியன் கிரயத்தில் அபிவிருத்தி வேலைகளை பூர்த்திசெய்வதற்கு 2015 திசெம்பர் 01 இல் காணி மீட்பு மற்றும் மீள்நிர்மாணக் கூட்டுத்தாபனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் களுத்துறை மாவட்டச் செயலாளர் கைச்சாத்திட்டிருந்தார்.

(இ) நிலையத்தின் அறிவூட்டல் பிரிவினால் நடாத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட நிகழ்வுக் கட்டளை முறைமை மீதான பயிற்சிச் செயலமர்வு மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், அனர்த்த தயார்நிலை அவசர பதிலளித்தல் திட்டங்களை மீளாய்வுசெய்வதற்காக நிலையத்தின் தயார்நிலை திட்டமிடல் பிரிவினால் நடாத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 04 நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதுக்கையிலுள்ள தகவல் தொடர்பாடல் நிலையம் மற்றும் அவற்றில் பொருத்தப்பட்டுள்ள ரூபா 72.47 மில்லியன் பெறுமதியான உபகரணம் என்பன 2011 இலிருந்து விளைவற்றிருந்தது. பின்னர், உரிய உபகரணம் கழற்றப்பட்டு 2015 மே 15 இலிருந்து நிலையத்தின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. ஆகையால், முன்னைய ஆண்டுகளின் போது பல இயற்கை அனர்த்தங்களை நாடு சந்தித்திருந்த போதிலும் செய்மதி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அமுல்ப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்திற்கான திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன. நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பிரகாரம், முறையான ஆய்வொன்றில்லாமல் அவசர நுட்ப செயற்திட்டத்திற்கான சர்வதேச நிலையத்தின் கீழ் 2011 இல் தகவல் தொடர்பாடல் நிலையம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் இது நிலையத்தால் ஸ்தாபிக்கப்பட்ட ஏனைய முறைமைகளுடன் இணங்கியிருக்கவில்லை. ஆகையால், உபகரணத்தை கழற்றுவதற்கும் பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பம் வழக்கிழந்திருந்ததுடன் அத்தகைய உபகரணத்தை கொழும்பிலுள்ள நிலையத்தின் களஞ்சியத்திற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இலங்கை ரெலிகொம், தகவல் தொடர்பாடல் நிலையத்தின் காணியின் உரிமையாளர்

அவர்களின் நோக்கங்களிற்காக உரிய காணியை விடுவிப்பதற்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிலையத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் வரிசை அமைச்சின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் இணங்கவில்லை. வரிசை அமைச்சின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 40 நடவடிக்கைகளும் இரத்தினபுரி மாவட்டத்தில் 09 ஏனைய நடவடிக்கைகளும் அமுல்ப்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் நிலையத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்படவேண்டிய 09 நடவடிக்கைகள் மாத்திரமும் இரத்தினபுரி மாவட்டத்தில் 04 நடவடிக்கைகளும் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. மேலும், குருநாகல் மாவட்டத்தில் 02 நடவடிக்கைகள் மாத்திரம் அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த அதேநேரம் வரிசை அமைச்சின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ளதன் பிரகாரம் பொலன்னறுவையில் ஒரு நடவடிக்கை அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது குருநாகல் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் முறையே 13 மற்றும் 16 நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு நிலையம் திட்டமிட்டிருந்தது.

### 4.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 266 மற்றும் 226 பதவிகளை கொண்டிருந்ததனால் அத்திகதியிலுள்ளவாறு 40 பதவிகள் வெற்றிடமாக இருந்தன. பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் உதவி பணிப்பாளர்கள் போன்ற பிரதான முகாமைத்துவப் பதவிகள் 2011 இலிருந்து வெற்றிடமாக இருந்ததுடன் அது நிலையத்தின் சீரான செயற்பாடுகளை மோசமாக பாதித்திருந்தது. நிலையத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுகள் திட்டத்தின் பிரகாரம், நிலையத்தின் மனித வளங்கள், நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் பணிப்பாளர், மனித வளங்கள் மற்றும் நிதி என்பவற்றின் ஆதிக்க எல்லையின் கீழ் உள்ளதுடன் அத்தகைய பதவி 05 வருடங்களிற்கு மேலாக நிரப்பப்படாதிருந்தது. நிலையத்தின் மனித வளங்கள் முகாமைத்துவம் மற்றும் நிதி நடவடிக்கைகள் 2011 ஆம் ஆண்டிலிருந்து 02 உதவிப் பணிப்பாளர்களினால் கையாளப்படுகின்றது.

(ஆ) நிலையத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தின் பிரகாரம், கல்வி மற்றும் அனர்த்தக் குறைப்பு பணிப்பாளர் பதவிக்காக பொது முயற்சியில் முகாமைத்துவ மட்டத்தில் 15 வருடங்களை விஞ்சிய அனுபவம் தேவைப்பட்ட போதிலும் அத்தகைய அனுபவத்தைக் கொண்டிராத நபர்கள் அத்தகைய பதவிகளிற்காக ஆட்சேர்ப்புச்செய்யப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரச்சட்டத்தை நிறைவேற்றுதல்

அனர்த்த முகாமைத்துவ நிலையம் 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையின் ஆதிக்க எல்லையின் கீழ் தொழிற்படுகின்றது. நிலையத்திற்கு மேலதிக அதிகாரங்களை கையளிப்பதற்கு இயலுமான வகையில் அதிகாரச்சட்டத்தை திருத்துவதற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு நடவடிக்கை எடுத்து 2014 யூன் 16 இல் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அதிகாரச்சட்ட வரைபு அனுப்பப்பட்டிருந்த போதிலும் 2016 மே 31 வரையிலும் அதிகாரச்சட்ட வரைபு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 தேசிய அவசர செயற்பாட்டுத் திட்டம்

அவசர நிலைமைகளின் போது நபர்கள் மற்றும் ஆதனங்களை பாதுகாத்தல் தொடர்பான தேசிய கொள்கையொன்றை ஸ்தாபிப்பதற்காக 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையத்தால் தயாரிக்கப்பட்ட தேசிய அவசர செயற்பாட்டுத் திட்டம் நாட்டின் அவசர தேவை உள்ள போதும் பின்வரும் காரணங்களினால் ஆக்கபூர்வமானதாக அமுல்ப்படுத்த முடியாதிருந்தது.

(அ) தேசிய அவசர செயற்பாட்டுத் திட்டம் அனர்த்த முகாமைத்துவ சபையின் இடைக்கால முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்பாட்டுத் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு பொறுப்பான 48 அரசாங்கத் திணைக்களங்களில் 07 அரசாங்கத் திணைக்களங்களின் கருத்துரைகளானது அத்தகைய திணைக்களங்களின் தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் மாற்றங்கள், வேறு திணைக்களங்களிற்கு திட்டத்தின் தயாரிப்பிற்காக ஈடுபட்ட அலுவலர்களின் இடமாற்றங்கள் மற்றும் அவற்றின் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் மீதான காலதாமதங்கள் போன்ற பல்வேறு காரணங்களால் 2016 யூன் 30 வரையிலும் நிலையத்திற்குக் கிடைத்திருக்கவில்லை. இதன் விளைவால், திட்டச் செயற்பாடு 2016 யூன் 30 வரையிலும் இறுதியாக்கப்பட முடியாதிருந்தது.

### 5.3 வாகனப் பாவனை

போக்குவரத்துப் பிரிவிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், நிலையத்தின் வாகன நகர்வில் 39 மோட்டார் வாகனங்கள் இருந்த போதிலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் 37 மோட்டார் வாகனங்களின் விபரங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் 07 மோட்டார் வாகனங்கள் மாத்திரம் நிலையத்தின் பெயரின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் ஏனையவை வரிசை அமைச்சின் பெயரின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தன. மேலும், மோட்டார் வாகனங்கள் தொடர்பான பொருள் மெய்மையாய்வு நிதிப்பிரமாணம் 756 இன் மூலம் வேண்டப்பட்டவாறு மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.4 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகளுக்காக தனியான பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு 02 அலுவலர்கள் மாத்திரம் இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் வருமானம், செலவுகள் மற்றும் ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளின் 30 சதவீதம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்வு விடயத்திற்குரியதாக இருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 15 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளிலுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் கருத்துரைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைத்திருக்கவில்லை.

### 5.5 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தில் காண்பிக்கப்பட்ட தேவையான அளவுகளை விஞ்சி மீட்புப் பைகள், கூடாரங்கள் மற்றும் தேடும் உபகரணம் போன்ற பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது ரூபா 4.30 மில்லியன் தொகை மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது. மேலும், ரூபா 75 மில்லியன் தொகை 10 மூலதன உருப்படிகளை கொள்வனவு செய்வதற்கு கொள்வனவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2015 யூன் 30 இற்கு முன்னர் அக் கொள்வனவுகளை பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 வரையிலும் அத்தகைய சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், நிலையத்தின் கொள்வனவுத் திட்டம் ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | களஞ்சிய முகாமைத்துவம் | பௌதீகரீதியாக களஞ்சியத்தால் பெறப்பட்டிராத ரூபா 20.36 மில்லியன் பெறுமதியான இருப்பு உருப்படிகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைச் சொத்துக்களாகக் காட்டப்பட்டிருந்தது. |
| (ஆ) | கணக்கீடு | கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளை திருத்துவதற்கு விசேட கவனம் தேவைப்படுகின்றது. |
| (இ) | முற்பணங்களைத் தீர்த்தல் | நிலையத்தின் பதவியணியினரைப் போன்று வெளித்தரப்பினர்களிற்கு வழங்கப்பட்ட முற்பண மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நீண்ட காலப்பகுதிக்கு மேலாக நிலுவையாக இருந்தன. |
| (ஈ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | நிலையம் விசேட அறிவுத் திறன்களையுடைய பதவியணியினரின் பற்றாக்குறைகளுடன் செயற்படுகின்றது. ஆகையால், அனர்த்த முகாமைத்துவம் மீதான நிலையத்தின் எதிர்கால மனிதவள சவால்களை எதிர்கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் நிலையத்தால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |